திருப்பத்தூர் மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழகசெயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேலூர் டி.எம்.கதிர்ஆனந்த், திருவண்ணாமலை சி.என். அண்ணாதுரை, எம்.எல்.ஏ.க்கள் திருப்பத்தூர் அ.நல்லதம்பி, ஆம்பூர் அ.செ.வில்வநாதன், அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், சாந்தி சீனிவாசன் முன்னாள் மாவட்ட கழக பொறுப்பாளர் முத்தமிழ்ச்செல்வி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய தூதர்

தமிழ்நாடு மருத்துவத் துறை திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, செப். 20- இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய தூதர் சிலாய் ஸாகி (Ms. Silai Zaki) சந்தித்து தமிழ்நாடு மருத்துவத்துறை திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்,

நடப்போம் நலம் பெறுவோம் "8 Km Health Walk" பங்கேற்பதற்கு விருப்பம் தெரிவித்தார் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை நேற்று (19.09.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய தூதர் சிலாய் ஸாகி (Ms. Silai Zaki) அவர்கள் நேரில் சந்தித்து, தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்புகள், திட்டங்கள், வளர்ச்சி பணிகள் குறித்து கேட்டறிந்து ஆலோசணை மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

மருத்துவத்துறை திட்டங்கள்!

இந்தியாவிற்கான புதியதாக பொறுப்பேற்றுள்ள ஆஸ்திரேலிய தூதர் மரியாதைக்குரிய சிலாய் ஸாகி (Ms. Silai Zaki) அவர்கள் மரியாதை நிமித்தமாக நேற்று சந்தித்தார்கள். இந்திய ஆஸ்திரேலிய சுகாதார சேவைகள் பற்றி பல்வேறு கருத்துகள், பரிமாறிக் கொள்ளப்பட்டது. மேலும், ஆஸ்திரேலிய நட்புறவை வளர்க்கும் திட்டங்கள் குறித்தும் அவர்கள் பல்வேறு வகையான செய்திகளை கூறினார்கள். பொதுவாக ஆஸ்திரேலியாவை பொறுத்தவரை, சற்றொப்ப 10 இலட்சம் இந்தியர்கள் வசித்து வருவதாகவும், அதில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களும் வாழ்ந்து வருவதாகவும் எடுத்து சொன்னார்கள். ஆஸ்திரேலியாவை பொறுத்தவரை, முதியோருக்கான மருத்துவ சேவைகள், அதேபோல் பெண்களுக்கான மார்பக புற்றுநோய் மருத்துவ திட்டங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ திட்டங்கள் மற்றும் உதவிகள் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து பேசி, அதுகுறித்து நேரடியாக பார்வையிட அழைப்பு விடுத்துள்ளார்கள். அவர்களிடத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மருத்துவ துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், மக்களைத்தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம் போன்ற பல்வேறு திட்டங்கள் குறித்து எடுத்துச்சொல்லப்பட்டது. குறிப்பாக நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் அவர்கள் கவர்ந்த திட்டமாக இருந்தது, அது குறித்து விரிவாக கேட்டுத் தெரிந்து கொண்டு, சென்னையில் உள்ள நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தில் கலந்து கொண்டு நடைபயிற்சி மேற்கொள்ள உள்ளதாக மகிழ்ச்சியான செய்தியினை கூறினார்கள் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், ஆஸ்திரேலியா நாட்டின் துணை தூதர் ஜெனரல்டேவிட் எக்லெஸ்டன், (Mr. David Eggleston) ஆகியோர் கலந்து கொண்டனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை நேற்று (19.09.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய தூதர் சிலாய் ஸாகி (Ms. Silai Zaki) அவர்கள் நேரில் சந்தித்து, தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்புகள், திட்டங்கள், வளர்ச்சி பணிகள் குறித்து கேட்டறிந்து ஆலோசனை மேற்கொண்டார். இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், ஆஸ்திரேலியா நாட்டின் துணை தூதர் ஜெனரல் டேவிட் எக்லெஸ்டன், (Mr. David Eggleston), ஆகியோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. மகளிர் அணி சார்பில்

கடலூர் மண்டலம் சார்பாக "கலைஞர் 100 - வினாடி வினா!"

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், செப். 20- கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல மைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத் துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி அறிவுறுத்தல் படி, வருகின்ற (22.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி அளவில், வடலூர், பண்ருட்டி சாலையில் உள்ள மங்கையக்கரசி திருமண மண்டபத்தில் "கலைஞர் 100 "வினாடி வினா கடலூர் மண்டலம் சார்பாக (கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, புதுச்சேரி) நடைபெறவுள்ளது.

கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகளும் மற்றும் மேற்கண்ட மாவட்டங்களை சேர்ந்த அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதுசமயம் இந்நிகழ்ச்சியில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக சார்பணிகளின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, கிளை கழக மகளிர் துணை செயலாளர்கள், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி மேயர், மண்டல குழு, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய குழு, மாநகராட்சி நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக

மாணவர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, செப். 20- தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணிச் செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி தி.மு.கழக மாணவர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நடத்தி உரிய தகுதியுள்ளவர்களை நிர்வாகிகளாக தேர்வு செய்திட கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதனடிப்படையில் தூத்துக்குடி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக மாணவர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்வதற்கான நேர்காணல் இன்று (20.09.2024, வெள்ளிக் கிழமை), காலை 10.00 மணிக்கு தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் (மாவட்ட ஆட்சியர் அலுவலக எதிர்புறம்) நடைபெற உள்ளது.

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு 30 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டுமே நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டும். கல்லூரிப் படிப்பு, பட்டய படிப்பு (டிப்ளமோ) படித்திருக்க வேண்டும். கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பவர்களும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர் ஒருவரும், துணை அமைப்பாளர்களாக 5 பேரும் தேர்வு செய்யப்படுவார்கள். இதில் ஒரு துணை அமைப்பாளர் மகளிராகவும், ஒரு துணை அமைப்பாளர் கல்லூரி அல்லது பட்டய படிப்பு படித்து கொண்டிருப்பராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நடைபெறும் மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணலில் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட மாணவரணியினர் கலந்து கொள்ளவும் அதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட கழகச் செயலாளர்கள் செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நகர, ஒன்றிய,பகுதி, பேரூர் கழக, அளவில்

மாணவரணி பொறுப்பாளர்களுக்கான நேர்காணல்!

மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம், செப். 20- இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின், அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருங்கிணைப்பு குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் தி.மு.கழக, மாணவர் அணியின் நகர ஒன்றிய பேரூர் கழகம் பகுதி கழகம் அணி நிர்வாகிகளை நேர்காணல் மூலம் தேர்வு செய்திட கழக மாணவர் அணி செயலாளர், சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ, அறிவித்துள்ளார்கள் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட நகர ஒன்றிய பகுதி பேரூர் கழக அளவில் மாணவர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்வதற்காண நேர்காணல் 23.09.2024 திங்கட்கிழமை காலை 10, மணிஅளவில் இராமநாதபுரம் பாரதி நகர் வைஸ்ராய் மஹாலில் நடைபெற உள்ளது.

இதில் நகரம், ஒன்றியம் பகுதி, பேரூர் கழக அளவில் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கு 30 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டுமே நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டும். கல்லூரிப் படிப்பு (அல்லது) பட்டயப்படிப்பு படித்திருக்க வேண்டும். கல்லூரியில் படித்துக் கொண்டிருப்பவர்களும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க்கழக அளவில் மாணவர் அணி அமைப்பாளர் ஒருவரும், துணை அமைப்பாளர்களாக 5 பேரும் தேர்வு செய்யப்படுவார்கள். இதில் ஒரு துணை அமைப்பாளர் மகளிராகவும், ஒரு துணை அமைப்பாளர் கல்லூரி அல்லது பட்டய படிப்பு படித்து கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நடைபெறும் மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணலில் சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட மாணவரணி தோழர்கள் கலந்து கொள்ளவும் அதற்கான ஏற் பாடுகளை சம்பந்தப்பட்ட நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவரது அறிக்கையில் கூறியுள்ளார்

தமிழ்நாடு

மின்சார ஒழுங்குமுறை ஆணைய தலைவர் பதவிக்கு விண்ணப்பங்கள்!

மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவிப்பு!

சென்னை, செப். 20– தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தலைவர் பதவிக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விண்ணப்பங்களை வரவேற்கிறது.

இது தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு:–

மின்சாரச் சட்டம் 2003ன் சட்டப் பிரிவுகளின்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு சட்டப்படியான ஆணையமாக தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாணையத்தில் 16.08.2024 முதல் தலைவர் பதவி காலியிடம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பதவியினை நிரப்புவதற்காக சென்னை உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் C.T.செல்வம் தலைமையில் அரசு தலைமைச் செயலாளர் மற்றும் மத்திய மின்சார அதிகார அமைப்பின் தலைவர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட தேர்வுக் குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது.

தேர்வுக் குழுவின் முடிவின்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தலைவர் பதவியினை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் 16.09.2024 அன்று மாலை 6.00 மணி வரை வரவேற்கப்பட்டது.

இந்நிலையில், தேர்வுக் குழுவின் முடிவிற்கிணங்க தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் பதவிக்கு விண்ணப்பம் செய்வதற்கான கால வரம்பினை 04.10.2024 மாலை 6.00 மணி வரை மேலும் நீட்டிப்பு செய்து நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இது குறித்த விவரங்கள் இணையதள முகவரி https://www.tn.gov.in/department/7ல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தலைவர் பதவிக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இவ்வாறு அச்செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அளவில் ஸ்கேட்டிங் கோகோ போட்டியில் மாநில அளவில் மதுரை அவனியாபுரம் பாளையம்பட்டி சங்கரநாராயணன் நாடார் பள்ளி மாணவர்கள் 2வது இடம் பிடித்து தங்கம் வென்று சாதனை படைத்தனர்.இதைத்தொடர்ந்து வருகின்ற 28 ,29ம் தேதிகளில் டெல்லி யில் தேசிய அளவில் நடைபெறுகின்ற போட்டியில் பங்கேற்க உள்ளனர். இதனையொட்டி தமிழக விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துறைக்கு பெருமை சேர்க்கும் விதமாக மதுரை தெற்கு தி.மு.க.மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் அறிவுறுத்தலின்படி தேசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கக் கூடிய திருப்பரங்குன்றம் தொகுதி மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்துதல் மற்றும் பரிசுவழங்குதல் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மதுரை மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் வி. சுவிதா விமல் தலைமை தாங்கி மாணவர்கள் அனைவருக்கும் ரொக்க பரிசு ரூபாய் 20000 வழங்கினார். மேலும் மாணவர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து கவுரவப்படுத்தி,போட்டியில் வெற்றி பெற வாழ்த்துத் தெரிவித்தார். பயிற்சியாளர் பிரபாகனுக்கும் சால்வை அணிவித்து பாராட்டுத் தெரிவித்தார்.

இராணிப்பேட்டை தொகுதி ஆற்காடு மேற்கு ஒன்றிய கழக சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர். காந்தி கலந்து கொண்டு வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற அனைவரும் உழைக்க வேண்டும் என்று சிறப்புரையாற்றினார். உடன் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர். வினோத் காந்தி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் என்.ஸ்ரீமதி நந்தகுமார், ஒன்றிய அவைத்தலைவர் எஸ்.தண்டாயுதபாணி, ஒன்றிய கழக செயலாளர் ஏ.வி.நந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர் எம்.மார்கபந்து, ஒன்றிய பொருளாளர் கே.எல்.வீரமணி, ஒன்றிய துணைச் செயலாளர்,ஒன்றிய குழு உறுப்பினர் ஜி. கோபாலகிருஷ்ணன், ஒன்றிய துணைச் செயலாளர் ஏ.அமுதா ஆறுமுகம், எஸ்.விஜயரங்கம், மாவட்ட பிரதிநிதிகள் டி.ஜெயபிரகாஷ், பி.ஜெயபிரசாத், மா.ப.சிவா,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பி.மோகனம், துணை அமைப்பாளர், ஸ்ரீநாத் ,ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் டி.ராமலிங்கம், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் பிரியா தண்டாயுதபாணி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாஸ், துணை அமைப்பாளர் Blt. சிவா, மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.